(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 60.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 யூன் 17, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நாணாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

கௌரவ **ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

கௌரவ **கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

கௌரவ **பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

**கௌரவ பீ. ஆரியவங்ஷ**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கே.இளங்குமரன்**

**கௌரவ அர்கம் இல்யாஸ்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ வசந்த புஷ்ப குமார**

**கௌரவ சமிந்த லலித் குமார**

**கௌரவ சட்டத்தரணி சரத் குமார**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி**

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ ஜகத் விதான**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ அரவிந்த செனரத்**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி(திருத்தம்) (ச.வ.-ஓ 19/2025)' சட்டமூலம் தொடர்பாகவும் மற்றும் 'வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி(திருத்தம்) (ச.வ.-ஓ 20/2025)' சட்டமூலம் தொடர்பாகவும் உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளது என்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். "

**II**

"2025.06.06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாய்மூல விடைகளை எதிர்பார்த்து எழுப்பப்படும் வினாக்களுக்கான விடைகளை அளிக்கும்போது, மேலதிக வினாக்களுக்கான சந்தர்ப்பத்தில் இந்தச் சபையில் ஏற்பட்ட நிலைமை பற்றிய தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 31 இலிருந்து 37 வரை வாய்மூல விடைக்கான வினாக்கள் மற்றும் எழுத்துமூல விடைக்கான வினாக்கள் குறித்து ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், அதன் பிரகாரம் பொது விடயங்கள் தொடர்பான கேள்விகள் பிரதம அமைச்சரிடம் அல்லது சனாதிபதியினால் எவரேனும் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்ட விடயங்களும் பணிகளும் தொடர்பாக அமைச்சு ரீதியிலான பொறுப்பைக் கொண்டுள்ள அத்தகைய அமைச்சரிடம் கேட்கப்படலாம்.

அதற்கமைவாக, நிலையியற் கட்டளை 33(1) இன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, அத்தகைய ஏதேனும் பதிலின்மீது எவரேனும் உறுப்பினர் இரண்டிற்கும் மேற்படாத குறைநிரப்புக் கேள்விகளை எழுப்ப முடியுமெனினும் அத்தகைய குறைநிரப்புக் கேள்விகள், தொடக்கக் கேள்வியில் உள்ளடக்கப்படாத விடயங்களை அறிமுகப்படுத்தலாகாது எனவும், வாய்மொழிமூலமான பதிலிலிருந்து எழுகின்ற விடயத்தை மேலும் தெளிவுப்படுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே கேட்கப்பட வேண்டுமெனவும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, மேலும் கேள்விகளின் ஏல்தகைமை பற்றிய விதிகளை ஏதேனும் குறைநிரப்புக் கேள்வி மீறுகின்றதெனச் சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால், சபாநாயகர் அத்தகைய குறைநிரப்புக் கேள்விக்கு அனுமதி மறுத்தல் வேண்டும்.

மேலும், குறைநிரப்புக் கேள்விகளையும் அவற்றிற்கான பதில்களைத் தெரிவிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட நேரத்தையும் சபாநாயகரால் கட்டுப்படுத்த முடியும் எனவும் நிலையியற் கட்டளை 33(2) இல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதன்படி, ஏற்புடைய கேள்விகளை எழுப்புவது குறித்து மிகத் தெளிவானதும் குழப்பம் அற்றதுமான நிலையியற் கட்டளை ஏற்பாடுகள் உள்ளபோதும், 2025.06.06 ஆம் திகதி கேள்வி எழுப்பப்படும்போது, இந்த சபையில் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற குழப்ப நிலை மற்றும் அதனால் சபை நடவடிக்கைளுக்கு பாரதூரமாக ஏற்பட்ட தடைகள் குறித்து நான் பெரிதும் கவலை அடைவதோடு, அவ்விடயத்தில் எனது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேடமாக அன்றைய தினமானது, காலஞ்சென்ற நான்கு உறுப்பினர்களின் அனுதாபப் பிரேரணைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததோடு, நிலவிய இந்த அமைதியற்ற நிலைமைக் காரணமாக அதில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்ற பார்வையாளர் கூடத்தில் பிரசன்னமாகியிருந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் முகங்கொடுத்த அசௌகரியங்களுக்காக எனது மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதன்படி, இந்த அனைத்து நிலைமைகளையும் கருத்திற்கொண்டு, எதிர்வரும் காலத்தில் வாய்மூல விடைகளை எதிர்ப்பார்த்து எழுப்பப்படும் வினாக்கள் குறித்து, எல்லாச் சந்தர்ப்பத்திலும் என்னால் நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதுடன், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களும் அதற்கு அமைவாக நடந்துகொள்வார்கள் என எதிர்ப்பார்க்கின்றேன். ஆகவே, தேவையற்ற தடைகளின்றி சபையின் நடவடிக்கைளை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த மீயுயர் சபையை பிரதிநிதித்துவம் செய்யும் தங்கள் அனைவரதும் முழுமையான ஒத்துழைப்பை நான் எதிர்ப்பார்க்கின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 மே 19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) சுற்றாடல் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சுனில் குமார கமகே அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2430/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) அஹங்கம, தித்தகல்ல, பேலெஸ்ஸ வீதி எனும் முகவரியில் வதியும் திரு. இபலவத்தகே காமினியினது 2025.03.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரத்ன கமகே சமர்ப்பித்தார்.

(2) (i) மொரட்டுவ, கட்டுபெத்த, ஜோன் ரொட்ரிகோ மாவத்தை, இல. 57/13 இல் வதியும் திருமதி ஜே.ஏ.ஈ.ஐ. பெரேராவினது 2025.03.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) பாணந்துறை, திப்பெத்த, இல. 179/2 இல் வதியும் திருமதி ரீ.எல்.சீ. த சில்வாவினது 2025.03.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி சமர்ப்பித்தார்.

(3) (i) மாலபே மிஹிந்து மாவத்தை, இல. 33/ஈ/32 இல் வதியும் திருமதி ஜானகி கொப்பேகடுவவினது 2025.03.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) ரம்புக்கன, ஹேவாதிவெல, மஹரகம, வாகொல்ல எனும் முகவரியில் வதியும் திருமதி எஸ். தினோசனி திசாநாயக்கவினது 2025.03.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அசோக குணசேன சமர்ப்பித்தார்.

(4) தெல்தெனிய, பஹலகம்மெத்த, இல. 298/4 இல் வதியும் திருமதி என்.வீ. சிரிமனலீயினது 2025.02.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஈ.எம். பஸ்நாயக்க சமர்ப்பித்தார்.

(5) பேருவளை, பன்னில வீதி, இல. 102 இல் வதியும் திரு. பி.ஆர். அன்ரனீ ஜூலியன் பர்னாந்துவினது 2024.12.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்திம ஹெட்டியாரச்சி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையைத் தாபிப்பதற்காகவும்; (44 ஆம் அத்தியாயமான) குதிரைப் பந்தய ஓட்டத்தின்மீது பந்தயம் பிடித்தல் கட்டளைச்சட்டத்தையும், (46 ஆம் அத்தியாயமான) சூதாட்டக் கட்டளைச்சட்டத்தையும் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தையும் நீக்குவதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 யூலை 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று .

**6. நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தம்):** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சார்பாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 யூலை 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று .

**7. சமுர்த்தி (திருத்தம்):** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்தி சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 யூலை 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் கல்வி, ஊழியப்படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று .

**8. விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2025 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2430/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மு.ப. 11.03 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(மு.ப. 11.27 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக" என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.50 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.30 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.52 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 4.51 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளரால் 2025 யூன் 18 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.